<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No.50/2021</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை அரசு தரப்பு சாட்சி– 1(PW–1)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **அற்புதராஜ்** | தொழில் | | **கூலி வேலை** |
| த/பெ. | : | **செபஸ்தியான்** | ஊர் | | **அலமேலுபுரம் பூண்டி** |
| வயது | : | 65 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>25.10.2025</u>**

**<u>எதிரிகள் 1, 3 ஆஜர். 2 வது எதிரி இறப்பு.</u>**

**முதல் விசாரணை :**

1) நான் அலமேலுபுரம் பூண்டியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும், இரண்டாவது எதிரியான சேகர் என்ற லூர்து சேவியரையும் தெரியும். இரண்டாவது எதிரி இறந்துவிட்டார்.

2) 06.11.2018 ஆம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் எனது வயலில் இருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்த போது எங்களுக்குள்ளே இருந்த இடப்பிரச்சனை காரணமாக எதிரிகள் மூவரும் மறித்து, 1 வது எதிரி கட்டையால் எனது நெஞ்சில் அடித்தார். 3 வது எதிரி கருவைக்கட்டையால் வலது கையில் அடித்தார். மண்வெட்டி கழியால் இரண்யாது எதிரி என் தலையில் அடித்தார். அதில் எனக்கு தலையில் இரத்தம் வந்தது. எனது மனைவி வந்து என்னை பிடித்தவுடன் மூன்றாது எதிரியின் மகன் என் மனைவியை கத்தியால் வலது கையில் குத்திவிட்டார்.

3) அங்கு வந்த எனது அக்கா தெரசம்மாளை 1 வது எதிரி கட்டையால் நெஞ்சில் அடித்தார். குடும்பத்தை அழித்துவிடவேண்டும், சும்மா விடக்கூடாது என்று கத்தியை காம்பித்து 1 வது எதிரி சொன்னார். உடனே அருகில் இருந்த கல்யாணி எங்களை ஒரு வேனில் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு தஞ்சாவூர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றோம். அங்கு போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது, **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால். குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./—எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No.50/2021</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை அரசு தரப்பு சாட்சி– 2(PW–2)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **பரிசுத்தமேரி** | தொழில் | | **கூலிவேலை** |
| க/பெ. | : | **அர்புதராஜ்** | ஊர் | | **அலமேலுபுரம் பூண்டி** |
| வயது | : | 55 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>25.10.2025</u>**

**<u>எதிரிகள் 1, 3 ஆஜர். 2 வது எதிரி இறப்பு.</u>**

**முதல் விசாரணை :**

1) நான் அலமேலுபுரம் பூண்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளையும், இரண்டாவது எதிரியான சேகர் என்ற லூர்து சேவியரையும் தெரியும். இரண்டாவது எதிரி இறந்துவிட்டார். எனது பக்கத்துவீட்டுக்காரர்கள்

2) எதிகளுக்கும் எங்களுக்கும் இடப்பிரச்சனை உள்ளது. 06.11.2018 ஆம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது 1 வது எதிரி பூவரச கட்டையால் எனது இரண்டு கையால் அடித்தார். அப்போது வயலில் இருந்து வீட்டிற்கு வந்த எனது கணவரை 1 முதல் 3 எதிரிகளும் கட்டை, குச்சி, மண்வெட்டியால் அடித்தார்கள். 3 வது எதிரி கணவரின் தலையில் அடித்தார். 2வது எதிரி கணவரில் கையில் அடித்தார். 1 வது எதிரி கணவரின் நெஞ்சியில் அடித்தார். 3 வது எதியின் மகன் என்னை கத்தியால் இடது கையிலும் வலது பக்க தோள்பட்டையிலும் கத்தியால் குத்திவிட்டார். 1 வது எதிரி எனது அம்மாவை கட்டையால் அடித்ததில் எனது அம்மா மயங்கி கீழே விழுந்துவிட்டார்.

3) உடனே அருகில் இருந்த கல்யாணி, இளவரசி மற்றும் சிலர் எங்களை ஒரு காரில் ஏற்றி திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு தஞ்சாவூர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால். குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

## <u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

## <u>CC. No.50/2021</u>

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை அரசு தரப்பு சாட்சி– 3(PW–3)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கல்யாணி** | தொழில் | | **விவசாயம்** |
| க/பெ. | : | **ரெங்கராஜ்** | ஊர் | | **அலமேலுபுரம் பூண்டி** |
| வயது | : | 56 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>25.10.2025</u>**

**<u>எதிரிகள் 1, 3 ஆஜர். 2 வது எதிரி இறப்பு.</u>**

**முதல் விசாரணை :**

1) நான் அலமேலுபுரம் பூண்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது உறவுக்காரர்கள். ஆஜர் எதிரிகளையும், இரண்டாவது எதிரியான சேகர் என்ற லூர்து சேவியரையும் தெரியும். இரண்டாவது எதிரி இறந்துவிட்டார். எனது உறவுக்காரர்கள்

2) சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 05.00 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வந்தபோது, அ.சா.1, 2க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே சண்டை நடந்துகொண்டிருந்தது. யாரும் இல்லை நானும் இளவரசி மட்டும் இருந்தோம். சண்டையை விலக்கி விட்டோம். இருதரப்பும் ஒருவரை ஒருவரை அடித்துக்கொண்டார்கள். அ.சா.1, 2 மற்றும் பட்டியல் சாட்சி 3 க்கு காயம் ஏற்பட்டது. 1, 3 எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டது. என் வீட்டு வாசல் முன்பு சண்டை நடந்தது யார் யாரை அடித்தது என்று குறிப்பாக சொல்லமுடியவில்லை. இருதரப்பினரும் அடித்துக்கொண்டார்கள். என்ன ஆயுதம் வைத்திருந்தார்கள் என்று நான் பதட்டத்தில் பார்க்கவில்லை. இளவரசி தான் பிடிங்கி விலக்கிவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால். குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.